


# ஒன்றுபடுவோம்

நந்ததேவன் நந்தகுமார்,
இல-15,கோவில் வீதி,
மங்கலபுரம்,
திருகோணமலை.
2017.03.07.

அன்புள்ள சுஜீவ,

உங்களது கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்கின்றேன். நான் நேற்றைய தினம் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான ஒன்றுகூடலில் கலந்துகொண்டேன். அந்நிகழ்வு காலை 8.30 க்கு ஆரம்பமானது. இதில் நூற்றுப்பத்து பேர் பயனாளிகளாகக் கலந்துகொண்டனர். முதலாவது உரையை நிகழ்த்திய பொதுச் சுகாதார அலுவலர், சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல் தொடர்பான, காணொளிகளைப் பயன்படுத்தி தகவல்களையும் விளக்கங்களையும் வழங்கினார்.

வீட்டுச் சூழலில் காணப்படும் சிரட்டைகள், டயர்கள்,பேணிகள், மூடிகள், போத்தல்கள், பொலித்தீன் உறைகள் மற்றும் ஏனைய நீர் தங்கக் கூடிய கழிவுப்பொருட்களைப் புதைத்து விடுமாறு அவர் அறிவுரைகளை வழங்கினார். கழிவுப்பொருள் பராமரிப்பை ஒழுங்காக மேற்கொள்வதால் சூழலின் அழகு, சுத்தம், பாதுகாப்பு என்பவற்றைப் பேண முடியும் என்றும் இவ்வாறு செயற்படுவதால் உடல் ஆரோக்கியம், உளத் திருப்தி ஏற்படும் என்றும் உதாரணங்களுடன் எடுத்துக் கூறினார். அத்துடன், நுளம்பு பெருகுதல், பரவுதல் தொடர்பாகவும் எடுத்துக்காட்டு களுடன் கூறியமை விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

நான் உங்களை நேரில் சந்திக்கும் போது இது தொடர்பான ஏனைய விபரங்களைக் கூறுகிறேன். இப்படியான ஒன்றுகூடல்களில் பங்குபற்றும் வாய்ப்பு

கிடைத்தால் நீங்களும் பங்குபற்றுங்கள். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என நினைக்கிறேன். இவ்விடயங்களை மக்களிடையே கூறுவதால் அவர்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும். எனவே நாங்கள் மகிழ்ச்சி நிறைந்த ஒரு பசுமையான சூழலை உருவாக்க ஒன்றுபடுவோம்.

இப்படிக்கு
தங்கள் நண்பன்
என். நந்தகுமார்.

**சொல் அறிமுகம்**

වදන් පෙළ

| | | |
|---|---|---|
| அழைப்பை | - | ආරාධනාව |
| சுற்றாடல் பாதுகாப்பு | - | පරිසරය සුරැකීම |
| ஒன்று கூடல் | - | හමුවේද |
| பயனாளிகளாக | - | ප්‍රතිලාභීන් ලෙස |
| காணொளி | - | වීඩියෝ පට |
| தகவல்களையும் | - | තොරතුරුත් |
| மேற்கொள்வதால் | - | ක්‍රියාත්මක කිරීමෙන් |
| உடல் ஆரோக்கியம் | - | ශාරීරික සුවය |
| உளத்திருப்தி | - | මානසික තෘප්තිය |
| விழிப்புணர்வு | - | දැනුවත් කිරීම |
| ஏனையோருக்கும் | - | අන් අයට ද |
| உழைப்போம் | - | කැපවෙමු |



## செயற்பாடு 1
## ක්‍රියාකාරකම 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.**

01. ஒன்று கூடலில் கலந்துகொண்டவர் யார்?

02. ஒன்று கூடல் எதுதொடர்பாக நாடத்தப்பட்டது?

03. ஒன்று கூடல் நடைபெற்ற திகதியைக் குறிப்பிடுக.

04. அங்கு கூறப்பட்ட முக்கிய விடயங்களை எழுதுக.

05. இங்கு பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்ப சாதனம் எது?



## செயற்பாடு 2
## ක්‍රියාකාරකම 2

**பொருத்தமான எழுத்தை இட்டு இடைவெளியை நிரப்புங்கள்.**
**පාඩම ඇසුරෙන් සුදුසු අකුර යොදා සම්පූර්ණ කරන්න.**

01. மங்க ______ புரம்

02. அன்புள் ______

03. மகி ______ ச்சி

04. அ ______ ப்பை

05. நிக ______ வு

06. கா ______ ளி.

07. வி ______ ப்புணர்வு.

08. உ ______ ப்போம்.

## செயற்பாடு 3
## ක්‍රියාකාරකම 3

பாடத்தில் உள்ள பன்மைச் சொற்களை இனங்கண்டு எழுதுங்கள்.
පාඩමේ ඇතුළත් බහුවචන පද හඳුනාගෙන ලියන්න.

## செயற்பாடு 4
## ක්‍රියාකාරකම 4

இந்தப் பாட விடயம் தொடர்பாக பதாதை ஒன்றைத் தயாரியுங்கள்.
පාඩමේ ඇතුළත් කරුණු උපයෝගී කරගෙන බැනරයක් නිර්මාණය කරන්න.

## செயற்பாடு 5
## ක්‍රියාකාරකම 5

இக்கடிதத்திற்கு சுஜீவ எழுதும் பதில் கடிதம் ஒன்றை எழுதுங்கள்.
මෙම ලිපියට සුජීව ලියනු ඇතැයි බලාපොරොත්තු වන පිළිතුරු ලිපිය ලියන්න.



## செயற்பாடு 6
## ක්‍රියාකාරකම 6

*நீங்கள் விரும்பிய அறிவுரைகள் ஐந்தை (5) எழுதுங்கள்.*

ඔබ කැමති උපදෙස් පහක් (5) ලියන්න.

01. ______________________________

02. ______________________________

03. ______________________________

04. ______________________________

05. ______________________________